மூலப்பொருள் பற்றுக்குறை எல்லாம் இருக்கின்றன. அவ்வப்பொழுது அரசாங்க கவனத்திற்கு கொண்டுவரப்படும்பொழுது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, சிறுதொழில்களுக்கு இப்பொழுது சிட்கோவின் மூலம் நல்லமுறையில் கடன் வழங்கப் படுகிறது. இருந்தாலும் மத்திய அரசாங்கம் அதற்கு 15 சத விகிதம் மானியம் கொடுக்கிறது. பின்தங்கிய வட ஆற்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியிலேதான் இது இருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கம் அளிக்கும் 15 சதவிகிதம் மானியத்தை எல்லாப் பகுதிகளுக்கும் வாங்கித் தர அரசாங்கம் பரிசிலனை செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பின்தங்கிய தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளுக்கு மத்திய அரசாங்கம் என்ன உதவி கொடுக்கிறதோ, அந்த உதவிகளெல்லாம் இப்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன.

### பருத்தி விதை எண்ணெய் ஆலை.

* 227 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் பருத்தி விதை எண்ணெய் உற்பத்தி ஆலை துவங்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :**

(அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

(முற்பகல் 9.30)

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் பருத்தி அதிகமாக உற்பத்தியாகிறது. ஆகவே இந்த பருத்தி விதை எண்ணெய் ஆலையைத் துவங்குவதற்கு ஏற்கனவே ஒரு பரிசிலனை இருந்ததே. அது கைவிடப்பட்டு விட்டதா ? அதை மறுபரிசிலனை செய்ய அரசு முன்வருமா ?

*1975 மார்ச் 7]*

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பருத்திவிதை எண்ணெய் எடுக்கின்ற ஆலை இப்போது கோவையிலும் ராஜபாளையத்திலும் இருக்கின்றன. அதுவல்லாமல் 9 பேர்களுக்கு மத்திய அரசு அனுமதி கொடுத்திருக்கிறது. இன்னும் இரண்டு பேர்கள் கோரிக்கை மனு கொடுத்திருக்கிறார்கள்; மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே அதிகமான தொழில் வளர்ச்சி இல்லாமலும் அதிகமாக பருத்தி விளைவிக்கக்கூடியதுமான கோவில்பட்டி வட்டாரத்தில் அங்கேயுள்ள மார்க்கெட்டிங் சொஸைடி மூலமாக இந்த ஆலையை ஆரம்பிக்க ப்ரப்போஸல் இங்கிருந்து கேட்டதாகத் தகவல் இருக்கிறதே, இப்போது அங்கே இருக்கிற 'சீட்' களை எல்லாம் வேறு இடங்களுக்கு அனுப்பக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, கூட்டுறவுத் துறையிலே அங்கே இந்த ஆலையை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கூட்டுறவுத் துறையின் மூலமாக இதுபோன்ற கோரிக்கை வந்தால் பரிசீலிக்கப் படும்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, பருத்தி விதை கால்நடைகளுக்கு முக்கியமான தீவினமாகக் கருதப்படுகிறது. இப்படி பருத்தி விதை எண்ணெய் ஆலைகளை விஸ்தரித்துக் கொண்டேபோனால் கால்நடைகளுக்கு தீவனப் பற்றுக்குறை ஏற்படுமல்லவா? ஆகவே அதைத் தடைசெய்யவேண்டும். அது மட்டுமல்ல, வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்து பருத்திக் கொட்டையை பர்ச்சேஸ் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அதையும் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கால்நடைகளுக்கு கஷ்டம் ஏற்படக்கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. அதையெல்லாம் பரிசீலித்துத்தான் அனுமதி கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை இனிமேல் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா:** மைஹைட்ரோட்டட் பருத்திக் கொட்டைதான் மாட்டுக்கு நல்லது என்று அக்ரிகல்சர் டிபார்ட் மெண்டால் சொல்லப்படுகிறது. ஆகவே அதனுடைய உற்

பத்தியை அதிகமாகச் செய்வதற்கு அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா? அதை உற்பத்தி செய்வதற்கு தடையில்லாமல் இருப்பதற்காவது அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

## முத்திரைத்தாள்கள் விற்பனே.

*228 **வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் பொதுமக்களுக்குத் தேவைப்படும் கோர்ட்பீஸ் ஸ்டாம்புகள், காபி ஸ்டாம்புகள், N.J. ஸ்டாம்புகள் முதலியன கிடைப்பதில் உள்ள இடர்பாடுகளே அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :**

(அ) ஆம்.

(இ) 1974-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திலேயே முத்திரைத் தாள்களின் தேவைப்பட்டியல்கள் நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் துணைக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பப்பட்டிருந்தும், அவர் அத்தேவைப்பட்டியலில் கண்டவாறு உடனடியாக முத்திரைத் தாள்களே அனுப்பி வைக்கவில்லை; திருநெல்வேலி மாவட்டத்தில் முத்திரைத்தாள்கள் பற்றுக்குறை ஏற்பட்டதற்கு இதுவே முக்கிய காரணமாகும். இருப்பினும் பொது மக்களின் நலனைக் காக்கும் பொருட்டு ஏனைய மாவட்டங்களிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்திற்கு முத்திரைத் தாள்களை அனுப்பி வைக்க துறைக்குள்ளாக சில ஏற்பாடுகள் உடனடியாகச் செய்யப்பட்டன. இவ்வாறு உரிய காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை ஓரளவிற்கு முத்திரைத்தாள் பற்றுக்குறையைத் தவிர்த்தது. நாசிக்கிலிருந்து முத்திரைத்தாள்கள் வழங்கப்படுவது தற்போது தொடங்கிவிட்டது. தற்போது பல்வேறு மதிப்புகளில் முத்திரைத்தாள்கள் மொத்தம் ரூபாய் 12.2 லட்சம் மதிப்பிற்கு திருநெல்வேலி மாவட்டக் கருவூலத்திற்கு வந்துள்ளன. அவை அம்மாவட்டத்திலுள்ள துணைக்கருவூலங்கள்